



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் மேற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### லாட்டரியில் கவனம் செலுத்துபவர்களுக்கு

# மேகதாது பற்றியெல்லாம் புரியாது!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி விமர்சனம்!

சென்னை, ஜூலை 30 -

லாட்டரியில் கவனம் செலுத்துபவர்களுக்கு மேகதாது வழக்கு பற்றியெல்லாம் புரியாது என்று அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக முன்னாள் அமைச்சர் ரகுபதி நேற்று அளித்த பேட்டி வருமாறு:



தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய காவிரி நீரைப் போராடிப் பெறுவதிலும், மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தி.மு.க. எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது. த.வெ.க. அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நேற்றைய தினம் திமுக அரசின் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து உண்மைக்கு மாறான பல கருத்துகளை தெரிவித்துள்ளார். இந்தியாவிலேயே சிறந்த சட்ட வல்லுநர்களைக் கொண்டு வழக்குகளை சிறப்பாக நடத்தி வெற்றிபெற்ற அரசு தி,மு,க, அரசு.

ஒரு அமைச்சர் இவ்வாறு பொய்யான தகவலை தெரிவிக்க கூடாது. குழந்தையே பிறக்காத போது பெயர் வைப்பதைப் போன்ற சூழல்தான் இது. ஆனால் ஆதவ் அர்ஜுனாவிற்கு இதெல்லாம் புரியாது, புரிய வாய்ப்பும் கிடையாது. ஏன் என்றால் அவர்கள் லாட்டரியில் கவனம் செலுத்துபவர்கள் இப்போது புதிதாக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். மேகதாது அணையைக் கட்டுவதற்கு திமுக அரசு ஒரு சொட்டு கூட, ஒரு படி கூட, ஒரு அங்குலம் கூட அனுமதித்தது கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

### சேலத்தில் வண்டல் மண் என்ற பெயரில்

# 2,500 லோடு கிராவல் மண் வெட்டி கடத்திய த.வெ.க. நிர்வாகி!

சேலம், ஜூலை. 30-

சேலம் மாவட்டம் வீரபாண்டி ஒன்றியத்திற் குட்பட்ட பனங்காடு ஆண்டிப் பட்டியில் உள்ள உள்ள ஏரியில் த.வெ.க நிர்வாகி கடந்த சில நாட்களாக ஏரியில் வண்டல் மண் எடுக்க அனுமதி பெற்றுள்ளதாக கூறி கிராவல் மண்ணை வெட்டி எடுத்து அந்த மண்ணை ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களுக்கு விற்று வந்துள்ளார் இவர் வெட்டி எடுத்த கிராவல் மண் 2,500 லோடு கடத்தியது ஆதார பூர்வமாக வெளிவந்தது.

இந்த நிலையில் ஆண்டிப் பட்டி மக்கள் ஏரியை கிணறு போல தோண்டி விட்டார்கள் இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையும் இதனால் குடிநீருக்கே ஆபத்து வந்து விட்டது என்று கூறி கிராம மக்கள். வண்டல் மண் எடுத்த டிராக்டரை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர் உடனே அந்த இடத்திற்கு தாசில்தார் வட்டார வளர்ச்சி அதிகாரி தனபால் மற்றும் மைன்ஸ் அதிகாரி கள் வந்த விசா ரணை நடத்தினர்.

இதை யொட்டி மண் எடுப்பதற்கு தடை விதித்தனர்.விதியை மீறி த.வெ.க. நிர்வாகி கிராவல் மண்ணை வெட்டி எடுத்தது உறுதி செய்யப்பட்டது.

அதிகாரிகள் த.வெ.க. நிர்வாகிக்கு அபராதம் மட்டும் விதிப்பாரா அல்லது திருட்டு தனமாக கிராவல் மண் எடுத்து விற்பனை செய்ததற்கு கிரிமினல் வழக்கு தொடர போலீசில் புகார் செய்வார்களா?

# சேலம் மாவட்டத்தில் தொழிற் தேர்வில் முறைகேடு!

சேலம், ஜூலை. 30–

தமிழக வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் அரசு மற்றும் தனியார் ஐ.டி.ஐ. படிப்பில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

இவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்றுநர் தேர்வு நடத்தப்படுகிறது

இதையொட்டி இவர்களுக்கு ஆண்டுதோறும் ஜனவரி ஜூலை மாதங்களில் தேர்வு நடை பெறுவது வழக்கம் அதன் படி 2026ம் ஆண்டுக்கு இம்மாதம் தேர்வு மேட்டூர் அரசு ஐ.டி.ஐ. வளாகத்தில் நடைபெற்ற அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கேற்ற மாணவர்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவியதாக கூறப்படுகிறது. தேர்வு நேரத்தில் அரசு ஐ.டி.ஐ. ஆசிரியர்கள் தேர்வு அறைக்கு உள்ளே சென்று மாணவர்களுக்கு உதவிடும் வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது. இது குறித்து மேட்டூர் சமூக ஆர்வலர்கள் கூறியதாவது இங்கு தேர்வு நடை பெற்ற சமயத்தில் சி.சி.டி.வி. கேமராக்கள் அணைக்கப்பட்டு ஆசிரியர்கள் நேரடியாக சென்று மாணவர் களுக்கு விடை எழுத உதவுவது போன்ற வீடியே வெளியாகி உள்ளது

இந்த தேர்வுக்கு வெளியில் இருந்து மேற்பார்வையாளர்களாக வருபவர்களுக்கு பணம் தர வேண்டும் என்பதற்காக ஒவ்வொர மாணவர்களிடமும் தலா ரூ 500/வாங்கி உள்ளதாக கூறுகிறார்கள் ஆக த.வெ.க. ஆட்சியில் கரெப்ஷன் கமிஷன் கலெக்ஷன் நடைபெற்று வருகிறது என்பதற்கு மேட்டூரில் நடைபெற்ற தொழிற்கல்வி தேர்வு அம்பலப்படுத்தியுள்ளது சான்று ஆகும்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி
### ஜூலை 30 (1986)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

“மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மருத்துவக் கல்வியில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலம் இதுவரை

# 26,204 பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்ட நன்னாள் இன்று (29.7.2026)

**2021** ஜூலை 29 இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் மறக்கமுடியாத மகத்தான நாள்.

மருத்துவக் கல்வியில் இதர பிற்படுயத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்த நன்னாள்.

சமூகநீதிக் கொள்கையில் உறுதி,

அசராத உழைப்பின் அடையாளம்

நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்த வழிகாட்டலில் உச்சநீதிமன்றத்தின் மூலம் வென்று வந்த நாள்.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் எல்லாம் என சமூகநீதிக்கான வரலாற்றை தொடங்கி வைத்தவர்கள் நம் முன்னோடிகள்.

நீதிகட்சியாக உருவாகி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என கடந்த நூற்றாண்டு காலத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ் சமுதாயத்தை படிப்படியாக முன்னேற்றியது சமூகநீதி அரசியல்.

சமூக நீதிப் போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றினார் தந்தை பெரியார்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சமூகநீதியை சட்ட வடிவங்களில் உறுதி செய்தார்கள்.

அணையாத திராவிடப் பெருஞ்சுடரை, கலைஞருக்குப் பின் தன் கைகளில் ஏந்தி “எல்லோருக்கும் எல்லாம்” என இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

‘கல்வியே நம் தலைமுறையை மாற்றும் ஆயுதம்’ என பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கொண்டிருந்த உறுதியோடு, நம் கழகத் தலைவர் அவர்களும் தமிழ்நாட்டு மாணவர் நலனில் காட்டும் அக்கறைகள் ஏராளம்.



மூத்த வழக்கறிஞர்
பி.வில்சன் எம்.பி.

மருத்துவ உயர்கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியை அறிந்து, அதற்கெதிரான சட்டப் போராட்டத்துக்கு ‘நீ சென்று வென்று வா’ என்று மூத்த வழக்கறிஞராகிய என்னிடம் ஆலோசனை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் , அவர் காட்டிய உறுதியிலேயே நாடாளுமன்றம் வழி, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் வழி போராட்டத்தை நடத்தினோம்.

இந்தியாவுக்கே வெளிச்சம் கிடைக்கும் வகையில், அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீட்டை உச்சநீதி மன்றம் வழி உறுதி செய்தோம்.

2019 ஆம் ஆண்டில், மாநிலங்களவை உறுப்பினராக எனக்கு மாபெரும் வாய்ப்பை அளித்தார் கழகத்தலைவர் அவர்கள். ஜனநாயகக் கடமையாற்றும் முதல் உரையிலேயே, மருத்துவப் படிப்புக்கான அனைத்திந்திய தொகுப்பு இடங்களில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு கோரிக்கையை வலியுறுத்தினேன்.

எந்தக் கோரிக்கை, யார் மூலம், எங்கு ஒலிக்க வேண்டும் என்பதை அறிவார் நம் தலைவர்.

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது.

“நாடு முழுவதும் உள்ள அனைத்திந்திய தொகுப்பில் உள்ள மாநில அரசுகளுக்கு உட்பட்ட அனைத்து இளநிலை, முதுநிலை, பட்டய, பல் மருத்துவப் படிப்புகளில் O.B.C. வகுப்பினருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டு அரசாணை வெளியிட்டது ஒன்றிய அரசு.

இதன் மூலம் 2021 முதல் 2026 வரை ஐந்து கல்வி யாண்டுகளில் சுமார் 26,204 பிற்படுத்தப்பட்ட , இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் அளித்த தரவுகளின் படி அதாவது MBBS படிப்பில் 9816 மாணவர்கள், BDS படிப்பில் 649 மாணவர்கள், PG (MD/MS) படிப்புகளில் 15,739 மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்று தெளிவாகிறது.

அந்த வகையில், இதுவரை இந்த வழக்கின் மூலமாக நாம் பெற்றிருக்கக்கூடிய 26,204 மருத்துவக் கல்வி இடங்களானது 175 மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டதற்கு ஒப்பானது.

ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கும் பல்லாயிரக்கணக்கான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்களின் மருத்துவக் கனவு நனவாக்கப்படுகிறது என்பதை இந்த தரவுகள் பறைசாற்றுகிறது.

வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அந்த சாதனைப் போராட்டத்தை நிகழ்த்திக் காட்டியவர் நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தனது உறுதி மிக்க செயல்பாடுகளால் இன்று இந்தியாவுக்கே வழிகாட்டும் தலைவராக, வரலாற்றை தெற்கிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர்.

இந்தியாவில் ஒட்டுமொத்த ஓ.பி.சி. மாணவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்டிய இந்த நாள், நம் கழகத் தலைவர் அவர்களின் வெற்றித் திருநாளாக கொண்டாடப்பட வேண்டும்.

என்றும்,கழகத் தலைவரின் வழியில் சாதனை பயணத்தை தொடர்வோம்!

# உதகை கிழக்கு நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

உதகை. ஜூலை, 30–

உதகை கிழக்கு நகர தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் YMCA கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு தலைமையில் நடை பெற்றது.

நகரக் கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் வரவேற்றுப் பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், உதகை நகரமன்றத் தலைவர் வானீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.






கூட்டத்தில், உதகை கிழக்கு நகரத்திற்கு உட்பட்ட அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடியேற்று விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்துவது எனவும்,

உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

கூட்டத்தில், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மோகன் குமார், மகேஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா, உதகை மேற்கு நகரக் கழக பொறுப்பாளர் ரமேஷ், நகர அவைத்தலைவர் ஜெயகோபி, நகர துணை செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், இச்சுபாய், ரீட்டா மேரி, நகரப் பொரு ளாளர் அனில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடேஷ், கார்த்திக் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கழக செயல்வீரர்கள், கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் நகர அவைத்தலைவர் ஜெயகோபி நன்றி கூறினார்.

### சிறப்பு எஃகுக்கான பி.எல்.ஐ. திட்டம் குறித்து திருப்தியான பதில் இல்லை!

# தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்கு நேரடி பதில் தேவை!

## மக்களவையில் - ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை. 30-

சிறப்பு எஃகுக்கான PLI திட்டம் குறித்து பொதுவான பதிலை மட்டுமே அளித்த ஒன்றிய அரசு; தமிழ்நாடு மற்றும் ஈரோட்டின் கோரிக்கைகளுக்கு நேரடி பதில் இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ. பிரகாஷ் குற்றம்சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ.பிரகாஷ், சிறப்பு எஃகுக்கான உற்பத்தி இணைப்பு ஊக்கத்தொகை (Production Linked Incentive PLI) திட்டத்தின் கீழ், மாநில வாரியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள், முதலீடுகள் மற்றும் பயனாளிகளின் புவியியல் பரவல் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்று ஒன்றிய எஃகு அமைச்சரிடம் விளக்கம் கோரினார்.

மேலும், தமிழ்நாட்டில் கூடுதல் உற்பத்தி நிலையங்கள் அமைக்க வேண்டும் என தொழில் அமைப்புகள், எஃகு உற்பத்தியாளர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்க ளிடமிருந்து (MSME) பெறப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்தும், ஈரோடு போன்ற தொழில் துறை மண்டலங்களில் செயல்படும் எஃகு மற்றும் பொறியியல் சார்ந்த MSME நிறுவனங்களின் பங்கேற்பை தற்போதைய மற்றும் எதிர்கால PLI திட்டங்களில் அதிகரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.



அத்துடன், முதலீடுகள் மாநிலங்கள் முழுவதும் சமநிலையாகப் பரவவும், மதிப்புக்கூட்டப்பட்ட எஃகு உற்பத்தி மற்றும் அதனைத் தொடர்ந்து உருவாகும் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கவும், PLI திட்டத்தின் கீழ் புதிய கொள்கை முயற்சிகள் பரிசீலனையில் உள்ளனவா என்பதையும் விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

எஃகு அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:-

(அ) முதல் (ஈ) வரை: சிறப்பு எஃகுக்கான உற்பத்தி இணைப்பு ஊக்கத்தொகை (PLI) திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், நிர்ணயிக்கப்பட்ட முதலீட்டு மற்றும் உற்பத்தித் திறன் வரம்புகளைப் பூர்த்தி செய்து சிறப்பு எஃகு தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான உறுதிப்பாட்டையும், உறுதியளிக்கப்பட்ட முதலீட்டின் குறைந்த பட்சம் 30 சதவீத நிகர சொத்து மதிப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. MSME நிறுவனங்கள் உட்பட அதிகமான நிறுவனங்கள் திட்டத்தில் பங்கேற்கும் வகையில், திட்டத்தின் மூன்றாவது சுற்றில் தகுதித் தரநிலைகள் தளர்த்தப்பட்டதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், சிறப்பு எஃகுக்கான PLI திட்டம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்றும், இதுவரை 15 மாநிலங்களைச் சேர்ந்த 100 நிறுவனங்களின் 167 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் தமிழ்நாட்டில் ஆறு திட்டங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பதில் தரப்பட்டுள்ளது.